بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/01/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறைநேசம் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் மாநபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியான இறைநேசம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் எஜமானரும் பின்பற்றுவதற்கு உரியவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றிய வண்ணம் இறைநேசத்தின் உயர்த்தரத்தை நிலைநாட்டினார்கள். அதன் விளைவாக, ஹுஸூர் (அலை) அவர்கள் மீது அல்லாஹ்வின் அருள்கள் பொழிந்தன. இறைவனுடன் அன்னாருக்கு இருந்த நேசத்தை மக்களும் உணர்ந்து வந்தார்கள். இது தொடர்பாக சில நிகழ்வுகளை எடுத்துரைப்பேன்.

அதற்கு முன்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களிலேயே இந்த நேசத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். ஓரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: எனது எந்த அமலின் காரணமாக இந்த இறையருள் எனக்குக் கிடைத்தது என்பதை என்னால் விவரிக்க இயலாது. எனது உள்ளத்துக்கு இயல்பாகவே இறைவனை நோக்கி நன்றியுணர்வுடன் கூடிய ஓர் ஈர்ப்பு இருப்பதை நான் என்னுள் உணர மட்டுமே செய்கிறேன். எதனாலும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, இது அவனது அருட்கொடையே ஆகும். அதாவது, இவை அல்லாஹ் என் மீது புரிந்துள்ள பேரருள்களாகும். இவையனைத்தும், அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானவரும், அன்பிற்குரியவருமான நபி பெருமானார் (ஸல்) அவர்களை நேசிப்பதனால்தான் எனக்குக் கிடைத்தன. பிறகு, இதன் விளைவாக அல்லாஹ்வின் அன்பு எனும் கதவுகளும் எனக்குத் திறந்து கொண்டே சென்றன.

ஓரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பள்ளிவாயில்களே எனது இல்லம். நல்லடியார்களே என் சகோதரர்கள். அல்லாஹ்வை நினைவுகூர்தலே எனது சொத்து, செல்வம். அவனுடைய படைப்பினமே எனது குடும்பம். பிறிதோரிடத்தில் கூறுகிறார்கள்: நாம் அல்லாஹ்வுக்காகவே ஒவ்வொன்றையும் நேசிக்கிறோம். பிறகு, கூறுகிறார்கள்: எமக்கு இறைவனுடன் இருக்கின்ற பிணைப்பை எதனாலும் முறிக்க முடியாது. நான் அவனது கண்ணியம் மற்றும் மிடுக்கின் மீது ஆணையாகக் கூறுகிறேன், உலகத்திலும் மறுமையிலும் அவனது மார்க்கத்தின் பெருமை வெளிப்படுவதைக் காட்டிலும், அவனது மாட்சிமை ஒளிர்வதைக் காட்டிலும், அவனது புகழ் ஓங்குவதைக் காட்டிலும் எனக்கு வேறு எதுவும் விருப்பமானதல்ல.

ஹஸ்ரத் முன்ஷீ அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: சோதனை காலங்களில் நமது ஜமாஅத்தின் சில பலவீனமான உள்ளம் கொண்டவர்கள் பற்றி எமக்குக் கவலை ஏற்படுகிறது. மேலும், கூறுகிறார்கள்: எனது நிலை என்னவெனில், 'நீ நிராகரிக்கப்பட்டுவிட்டாய்; உனது எந்த நோக்கத்தையும் நாம் நிறைவேற்ற மாட்டோம்' என்று எனக்குத் தெளிவாக ஓசை வந்தாலும், இறைவன் மீதான அன்பு, நேசம் மற்றும் மார்க்கத் தொண்டில் எந்தக் குறையும் ஏற்படாது என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹுஸூர் (அலை) அவர்களின் அகத்தின் ஆன்மாவின் அணு அணுவிலும் அலை மோதிக் கொண்டிருந்த, படைப்பாளன் மீதான அன்னாரது அந்தப் பேரன்பும், அன்னாருடைய ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் எந்நேரமும் தெள்ளத்தெளிவாகத் தென்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இங்கே ஒரு நபர் இருந்தார். பிறகு ஜமாஅத்தில் இணைந்தும் விட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுடன் அவருக்கு நல்ல தொடர்பு இருந்தது. ஆனால், அஹ்மதி ஆவதற்கு முன்பு ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அந்த நபர் மீது 20 ஆண்டுகள் கோபமாக இருந்தார்கள். அதற்குக் காரணம், அவருடைய ஒரு மகன் இறந்து போனபோது, 'இறைவன் என்மீது பெரும் அநீதியிழைத்து விட்டான்' என்று அவர் வாயில் இருந்து வந்து விட்டது. பிறகு, அல்லாஹ் அவருக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்கினான். பிறகு, அவர் அறியாமையிலிருந்து விடுபட்டார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தலைசுற்றல் பிரச்சனை இருந்தது. ஒரு வைத்தியர் அதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவர் எங்கோ தொலைவிலிருந்து வரவழைக்கப்பட்டார். அவர் ஹுஸூர் (அலை) அவர்களைப் பார்த்து விட்டு, 'நான் இரண்டு நாள்களில் உங்களை குணப்படுத்தி விடுவேன்' என்று கூறினார். ஹுஸூர் (அலை) அவர்கள், "இவர் இறைவன் என வாதம் புரிகிறார்; உண்மையில், அல்லாஹ்வே குணப்படுத்துபவன் ஆவான்" என்று கூறி, அவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் இருந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலீ சாஹிப் இர்பானீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "எனக்கு டல்ஹவ்ஸீ செல்ல வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், மலைகளின் பசுமையான பகுதிகள் மற்றும் ஓடும் நீரோடைகளைப் பார்த்து, இயல்பில் தானாகவே அல்லாஹ்வைத் துதிக்கும் உணர்வு பொங்கியும் எழும். மேலும், இறைவணக்கத்தில் ஓர் இன்பம் கிடைக்கும்."

மதிப்பிற்குரிய மௌலா பக்ஷ் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: மர்ஹூம் முபாரக் சாஹிப் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பெரும் கவலையும், வருத்தமும் இருந்து வந்தது. சாஹிப்ஸாதா சாஹிப் அவர்கள் மரணமடைந்தபோது, சில சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) இரங்கல் தெரிவிக்க வந்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். அப்பொழுது அன்னார் வழக்கம்போல், இல்லை, இன்னும் அதிகம் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அன்னார் கூறினார்கள்: "முபாரக் அஹ்மத் இறந்து விட்டார். என் இறைவன் கூறியது நிறைவேறி விட்டது. அவன், 'இந்தப் பிள்ளை ஒன்று விரைவில் இறந்து விடுவார்; அல்லது மிகவும் இறைநேசம் கொண்டவராகத் திகழ்வார்' என்று முன்னரே கூறி விட்டான். ஆக, அல்லாஹ் அவரை அழைத்துக் கொண்டான். ஒரு முபாரக் அஹ்மத் என்ன, ஓராயிரம் மகன்கள் இருந்து, ஆயிரம் பேரும் இறந்து போகிறார்கள்; ஆனால், என் இறைவன் மகிழ்ச்சியடைகிறான் என்றால், அதாவது, அவனது கூற்று நிறைவேறுகிறது என்றால், எனது மகிழ்ச்சி அதிலேயே அடங்கியிருக்கிறது."

லுத்யானாவைச் சேர்ந்த முன்ஷீ அஹ்மத் ஜான் சாஹிப் அவர்கள் ஹஜ்ஜுக்கு செல்ல இருந்தபோது, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் அவர்களுக்கு இப்படி கடிதம் எழுதினார்கள்:- இந்த எளியவனின் ஒரு பணிவான விண்ணப்பத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! தங்களுக்கு இறையருளால் பைத்துல்லாஹ்வை தரிசிக்கும் நல்வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த அருளுக்குரிய இடத்தில் அல்லாஹ்வின் அடியார்களில் மிகவும் அற்பமானவனான இந்த எளியவன் சார்பாக இந்த சொற்களில் வேண்டிக் கொள்ளுங்கள்:

கருணையாளர்கள் அனைவரிலும் சிறந்தோனே! பணிவுள்ளனும், திறமை அற்றவனும், குற்றங்களால் நிறைந்தவனும், தகுதியற்றவனுமான உன் அடியான் குலாம் அஹ்மத் என்பவன் நீ படைத்த இந்திய நிலப்பரப்பில் இருக்கிறான். அவனது கோரிக்கை என்னவென்றால், கருணையாளர்களுக்கெல்லாம் பெரும் கருணையாளனே! நீ என் மீது திருப்தி அடைந்திடு! என்னுடைய பிழைகளையும், குற்றங்களையும் மன்னித்துவிடு! ஏனென்றால், நீ மிக்க மன்னிப்போனும், மீண்டும் மீண்டும் கருணைபுரிபவனும் ஆவாய். நீ மிகவும் திருப்தி கொள்ளக்கூடிய செயலை என்னை செய்ய வைத்திடு. எனக்கும் என்னுடைய நஃப்ஸுக்கும் (மனதுக்கும்) நடுவில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையே உள்ள தொலைவை ஏற்படுத்தி விடு. எனது வாழ்வை, மரணத்தை மற்றும் எனக்கு இருக்கின்ற ஒவ்வோர் ஆற்றலையும் உன் வழியில் செலவிடச் செய். உன் மீதான நேசத்திலேயே என்னை உயிர்வாழச் செய். உன் மீதான நேசத்திலேயே என்னை மரணிக்கச் செய். உன்னுடைய முழுமையான நேசர்களுடனேயே என்னை எழுப்பிடு!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கூறுவதாவது, இறைவனை நேசிப்பதனாலும், அவனுக்குக் கட்டுப்படுவதனாலும் மிக மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று எனக்கு உறுதியளிக்கப்பட்டாலும் சரி, எனது இயல்பு எப்படிப்பட்டது என்றால், அது அந்த துன்பங்களையும் இன்னல்களையும், ஓர் இன்பத்துடனும், அன்பெனும் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் தாங்கிக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது என்று நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அறிந்துள்ள அந்த அடையாளங்களை என்னால் கணக்கிட முடியாது. நீயே! என் இறைவன் ஆவாய் என்று நான் உன்னை அடையாளம் காண்கிறேன். அன்னார் அல்லாஹ்விடம் கூறுகிறார்கள்: “எனவே, ஒரு

பால்குடிக்கும் குழந்தை தாயைக் கண்டதும் துள்ளி குதிப்பதைப் போன்று எனது ஆன்மா உனது பெயரைக் கேட்டு துள்ளி குதிக்கிறது. ஆனால், பெரும்பாலான மக்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவும் இல்லை; என்னை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.” எனவே, இந்த இறையன்பு, இறைநேசம்தான் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்குத் தம் எஜமானரைப் பின்பற்றியதனால் அல்லாஹ்வுடன் உருவானது. இதை உருவாக்குமாறு அன்னார் தமது ஜமாஅத்திற்கும் வலியுறுத்திக் கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: எல்லாத் தியாகங்களுக்கும் ஆயத்தமாக இருங்கள். நீங்கள் அல்லாஹ்வுக்காகத் தியாகம் செய்யும்போது, அவன் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தி, அவனுக்கான உரிமையை செலுத்துவீர்கள் என்றால், அல்லாஹ்வும் உங்கள்மீது அவ்வாறே அன்பு காட்டுவான். எல்லாப் பகைவர்களிடமிருந்தும் உங்களைக் காப்பான். எல்லாத் துன்பங்களிலிருந்தும் உங்களைக் காப்பான். அவனுடைய திருப்திக்காக நீங்கள் என்ன பணி செய்தாலும், அதற்கு அல்லாஹ் உங்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் எண்ணற்ற அருள்களை வழங்குவான். அல்லாஹ் நம் அனைவரையும் அல்லாஹ்வின் அவ்வாறான அன்பிற்குரியவர்களாக, அவன் மீது அன்பு செலுத்தக்கூடியவர்களாக ஆக்குவானாக.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நேற்றிலிருந்து புத்தாண்டு தொடங்கி விட்டது. மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நமக்கு எண்ணற்ற அருள்களைக் கொண்டு வரும் ஆண்டாகத் திகழ்வதற்கு துஆக்கள் செய்யுங்கள். எதிர்ப்பவர்கள் மற்றும் பகைவர்களின் சூழ்ச்சிகளை அல்லாஹ் மண்ணோடு மண்ணாக்குவானாக. ஜமாஅத்துக்கு முன்னரைவிட அதிகம் முன்னேற்றங்களை வழங்குவானாக. வெளிநாடுகளில் இருக்கின்ற நாம், அதிலும் குறிப்பாக, சுதந்திரமான நாடுகளில் சுதந்திரமாக இருப்பவர்கள் புத்தாண்டின் மகிழ்ச்சிகளைக் கொண்டாடுகிறோம். பாக்கிஸ்தான் போன்ற இடங்களிலும் மக்கள் கொண்டாடுகிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நாம் இறைவழியில் சிறைசென்ற சகோதரர்களையும் துஆக்களில் நினைவில் கொள்ள வேண்டும்.

பாக்கிஸ்தானின் சிறைச்சாலைகளில் - கடந்த நாள்களில் நான் கூறியது போன்று, முபாரக் சானீ சாஹிப் அவர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். பிற சிறைவாசிகளும் சிறைபட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். அந்த நிலையிலும் அவர்கள் புதிய ஆண்டில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு நுழைகிறார்கள்; அவர்களுக்கு எந்த முறையீடும் கிடையாது. அல்லாஹ்வின் திருப்திக்காக அவர்கள் இரும்புக்

காப்புகளை அணிந்துள்ளார்கள். அல்லாஹ் அவர்கள் விரைவில் விடுதலை பெற வழிவகை செய்வானாக.

நமக்கும், அந்த சிறைவாசிகளுக்கும், சிரமங்களில் மூழ்கியிருக்கும் அனைத்து அஹ்மதிகளுக்கும் அல்லாஹ்வின் மீதான நேசம் பற்றிய புரிதல் முன்னரைவிட அதிகம் கிடைக்கட்டுமாக. சிரமங்களின் காரணமாக நமக்கு அல்லாஹ்வின் மீதான அன்பில் குறை ஏற்படுவதற்கு பதிலாக, அது முன்பைவிட அதிகரிக்கட்டுமாக. அநீதிக்குள்ளானவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகின் அநீதிக்குள்ளான அனைவரையும் அநீதியிழைப்பவர்களின் பிடியிலிருந்து விடுவிப்பானாக. உலகில் அமைதி நிலவட்டுமாக.

*இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகன்வழிக் கொள்ளுப் பேத்தியும், ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன்வழிப் பேத்தியும், ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழிப் பேத்தியும், சய்யித் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்களின் துணைவியாரும் ஆன* ***மதிப்பிற்குரிய ரைஹானா பாஸ்மா சாஹிபா அவர்கள்****, டாக்டர் அப்துல் ஹலீம் சாஹிப் அவர்களின் துணைவியாரான லைபீரியாவின் முன்னாள் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்* ***மதிப்பிற்குரிய இஃபத் ஹலீம் சாஹிபா அவர்கள்*** *மற்றும் எகிப்தைச் சேர்ந்த* ***மதிப்பிற்குரிய அப்துல் அலீம் பர்பரீ சாஹிப் அவர்கள்*** *ஆகிய மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். மர்ஹூம்கள் மூவரின் பாவமன்னிப்பு மற்றும் உயர்ப்படித்தரத்துக்காக துஆ செய்தார்கள். மேலும், அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகை தொழவைக்கப்படும் என அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا
وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ
اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی
عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ
اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**